2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. கோபிநாத் பாண்டுரங் முண்டே, மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானங்கள். "2014 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் மகாராஷ்டிரா மாநிலம், பீட் தொகுதியிலிருந்து மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று பணியாற்றியவரும், சிறந்த பாராளுமன்றவாதியும், மனிதாபிமானம் மிக்கவரும், தேசபக்தரும், சமுதாயத்திற்காக தன்னலமற்றுப் பணியாற்றியவரும், பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு. கோபிநாத் பாண்டுரங் முண்டே அவர்கள் 3-6-2014 அன்று சாலை விபத்தில் உயிரிழந்தது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இவர் 1980 ஆம் ஆண்டு முதல் 1985 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1990 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலும் ஐந்து முறை மகாராஷ்டிர மாநில சட்டமன்ற உறுப்பினராகவும், 1992 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை மகாராஷ்டிர மாநில சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகவும், 1995 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரை மகாராஷ்டிர மாநில துணை முதல்வராகவும், 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை 15-வது மக்களவையின் எதிர்க்கட்சித் துணைத் தலைவராகவும் திறம்படப் பணியாற்றியவர். மேலும், பல்வேறு பாராளுமன்ற நிலைக் குழுக்களின் தலைவர் மற்றும் உறுப்பினராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர். இவர் பாரதிய ஜனதா கட்சியில் மாநில மற்றும் தேசிய அளவில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

முற்பகல் 10–05

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், மௌலிவாக்கத்தில் தனியார் கட்டடம் இடிந்து விழுந்ததில் ஏற்பட்ட உயிரிழப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கம் கிராமத்தில் கட்டப்பட்டு வந்த 11 மாடிக் கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில் ஏற்பட்ட மனித உயிரிழப்புகள் குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்.

"காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கம் கிராமத்தில் தனியாரால் கட்டப்பட்டு வந்த 11 மாடிக் கட்டடம் 28–6–2014 அன்று மாலை இடிந்து விழுந்த விபத்தில், கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் 61 பேர் உயிரிழந்தது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இக்கொடிய விபத்து குறித்து செய்தி அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் விபத்து நடந்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டு, அங்கு நடைபெற்றுவரும் மீட்புப் பணிகள் குறித்து ஆய்வு செய்து தேவையான அறிவுரைகளை வழங்கி, மீட்புப் பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள்.

இவ்விபத்தில் மரணமடைந்த அனைத்து குடும்பங்களுக்கும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கவும், தமிழ்நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்குக் கூடுதலாக ஐந்து இலட்சம் ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டார்கள். இந்தத் துயர சம்பவத்தில் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களையும், அவர்தம் குடும்பத்தினரையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, 50,000 ரூபாய் நிதி உதவி வழங்கியதோடு, அவர்கள் விரைவில் பூரண குணமடைய தேவையான உயர் சிகிச்சை அளிக்கவும்,